ஜீவநதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

OCTOBER 2026



SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only.

ஷார்ஜா தமிழ் திருச்சபை - கன்னியாகுமரி பேராயம்
SHARJAH TAMIL CONGREGATION - KANYAKUMARI DIOCESE

ஜீவநதி

அக்டோபர் 2026 - இதழ் 230

"கர்த்தர் நன்மையானதைத் தருவார், நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்."

சங்கீதம் 85:12.

SHARJAH TAMIL CONGREGATION

(CSI KANYAKUMARI DIOCESE)

P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576

For private circulation only

அனுதின மன்னா

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும்,
ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. (சங்கீதம் 19:7)

தேதி	நாள்	காலை	சிந்தனை வசனம்	மாலை
1	வியாழன்	நெகே. 2:17-20	2:17	1 தீமோ. 5:1-10
2	வெள்ளி	சங். 28:1-9	28:1	ஆதி. 47:1-12
3	சனி	2 இராஜா. 6:8-17	6:16	யோசு. 23:1-11
4	ஞாயிறு	எண். 11:25-35	11:25	ஆதி. 18:1-15
5	திங்கள்	சங். 9	9:12	2 சாமு. 12:1-12
6	செவ்வாய்	அப். 6:1-6	6:3	யாத். 16:12-23
7	புதன்	1 கொரி. 4:1-5	4:1,2	யாத். 32:30-35
8	வியாழன்	யோவா. 15:12-20	15:12	நியா. 6:1-16
9	வெள்ளி	யோவா. 15:12-20	15:16	ஆதி. 14:14-24
10	சனி	யோவா. 15	15:18,19	ஏசா. 43:1-7
11	ஞாயிறு	2 கொரி. 12:1-10	12:10	யோவா. 9:1-7
12	திங்கள்	நியா. 6:11-16	6:14	யோவா. 14:1-7
13	செவ்வாய்	2 கொரி. 12:1-6	12:5	1 இராஜா. 17:17-24
14	புதன்	ஏசா. 40:21-31	40:31	2 சாமு. 9:6-13
15	வியாழன்	அப். 3:1-10	3:7	அப். 3:1-10
16	வெள்ளி	பிர. 7:12-25	7:19	லூக். 8:26-35
17	சனி	பிலி. 4:8-14	4:13	யாத். 4:1-12
18	ஞாயிறு	எரே. 29:12-15	29:13	ஆதி. 39:1-6
19	திங்கள்	சங். 37:23-32	37:27	ஆதி. 41:17-43
20	செவ்வாய்	எபி. 11:17-31	11:30	பிர. 11:1-10
21	புதன்	மாற். 4:35-41	4:40	தானி. 1:1-9
22	வியாழன்	சங். 37	37:18	தானி. 3:1-22
23	வெள்ளி	சங். 121	121:7	தானி. 6:1-24
24	சனி	ஏசா. 35:1-10	35:3	லூக். 10:30-37
25	ஞாயிறு	2 இராஜா. 23:1-10	23:3	ஏசா. 1:1-17
26	திங்கள்	சங். 11	11:7	லூக். 19:1-10
27	செவ்வாய்	சங். 26	26:2	எரே. 29:1-14
28	புதன்	லூக். 5:36-39	5:38	ஆதி. 16:12-25
29	வியாழன்	தீத். 3:1-8	3:5	லூக். 15:11-32
30	வெள்ளி	சங். 119:25-32	119:28	எபே. 2:1-10
31	சனி	லூக். 5:36-39	5:39	பிலி. 2:12-24

சபை ஆயரிடமிருந்து...

கிறிஸ்துவில் அன்பார்ந்த இறைமக்களே!

இப்புதிய மாதத்திலும் ஆயர்மடல் வழியாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கடந்த மாதம் நாம் நிறைவேற்றிய திருப்பணிகள் மூலம் இறைவன் நமக்கு நல்கிய நன்மைகளுக்காய் நன்றி செலுத்துவோம்.

நம்முடைய திருச்சபையில் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளையும், பண்டிகைக் காலங்களையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே திருச்சபையின் சார்பில் நடைபெற இருக்கின்ற நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாய் நடைபெற ஜெபிக்கவும், ஒவ்வொரு நிகழ்வுகளின் தேவைகளை சந்திக்கவும், தேவையான அனைத்து ஆதரவுகளைத் தந்து திருச்சபையின் திருப்பணிகளைத் தாங்க அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த மாதத்திலும் நம்முடைய திருச்சபைக்கு புதிதாக வந்துள்ள அன்பான சகோதரர், சகோதரிகள் மற்றும் குடும்பத்தினரை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். நீங்கள் இந்த இடத்திற்கு வந்திருப்பது ஒரு சாதாரண சந்திப்பு அல்ல, தேவன் நம்மை ஒரே குடும்பமாக இணைத்திருக்கிறார் என்று நாம் நம்புகிறோம். **"ஆகையால் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்"** (ரோமர் 15:7) என்று வேதம் நம்மை அழைக்கிறது. அதுபோல, உங்களை அன்போடும் மகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொள்கிறோம். இந்த திருச்சபை உங்களுக்கு ஒரு வழிபாட்டு இடமாக மட்டுமல்லாமல், அன்பு, ஐக்கியம், ஜெபம் மற்றும் ஆறுதல் நிறைந்த ஒரு ஆன்மீகக் குடும்பமாக இருக்கட்டும்.

நம்முடைய திருச்சபையின் Harvest festival இம்மாதம் 11-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு Habitat Private School, Al Jurf, Ajman-ல் வைத்து நடைபெறும் அறுப்பின் பண்டிகை ஸ்தோத்திர தொழுகையில் அனைவரும் பங்கேற்பதுடன் உற்சாகமான காணிக்கைகளையும் படைத்து கடவுளை மகிமைப்படுத்த அன்பாய் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் நமது திருச்சபையின் சார்பில் அறுப்பின் பண்டிகையில் அமைக்கப்படும் ஸ்டாலில் அனைவரும் ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் பங்கேற்போம். நமது நேரம், உழைப்பு, ஒத்துழைப்பு என

ஒவ்வொருவரின் சிறிய பங்களிப்பும் இந்தப் பணியை சிறப்பாகச் செய்ய உதவும். **“எல்லாவற்றையும் கர்த்தருடைய மகிமைக்காகச் செய்யுங்கள்.”** 1 கொரிந்தியர் 10:31 ஒன்றிணைந்து செயல்பட்டு, இந்த நிகழ்வை ஆசீர்வாதமானதாக மாற்றுவோம்.

கர்த்தர் நன்மையானதைத் தருவார், நம்முடைய தேசமும் தன் பலனைத் தரும் (சங்கீதம் 85:12) என்ற வசனம், தேவனுடைய நன்மையிலும் கிருபையிலும் நம்பிக்கை வைக்க நம்மை அழைக்கிறது. நாம் விதைக்கும் ஒவ்வொரு நன்மைக்கும் தேவன் தமது நேரத்தில் நல்ல பலனைத் தருவார். எனவே, நம்பிக்கையுடன் தேவனைப் பற்றிக்கொண்டு நன்மை செய்து வாழ்வோம். நம் குடும்பங்களிலும், திருச்சபையிலும், தேசத்திலும் தேவனுடைய நன்மையும் ஆசீர்வாதமும் பெருகட்டும். ஆமென். இறையாசி என்றென்றும் உங்களோடிருப்பதாக!

இறைப்பணியில்
Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்
சபை ஆயர்.

அருளுரைப்பகுதி

“கர்த்தர் நன்மையானதைத் தருவார், நம்முடைய தேசமும் தன் பலனைத் தரும்”. (சங்கீதம் 85:12)

அன்புக்குரியவர்களே இறை இயேசு கிறிஸ்து நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

ஒவ்வொரு புதிய மாதமும் நம்முடைய வாழ்க்கையில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துகிறது. குடும்பம், பிள்ளைகளின் எதிர்காலம், வேலை, பொருளாதாரம், உடல்நலம், ஊழியம், உறவுகள் போன்ற பல தேவைகளுக்காக நாம் ஆண்டவரை எதிர்நோக்குகிறோம். இத்தகைய சூழ்நிலையில் சங்கீதம் 85:12 நமக்கு ஒரு உறுதியான விசுவாச வார்த்தையைத் தருகிறது: **“கர்த்தர் நன்மையானதைத் தருவார்.”** இது வெறும் ஆறுதலான வார்த்தை அல்ல, நல்லவராகிய தேவன் நம்முடைய வாழ்க்கையில் நன்மையைச் செய்கிறார் என்ற விசுவாச அறிக்கையாகும்.

தேவனுடைய நன்மை என்பது நாம் விரும்புவதையெல்லாம் அவர் கொடுப்பது என்று பொருளல்ல. நம்முடைய உண்மையான நலனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் ஏற்றதையே அவர் வழங்குகிறார். சில நேரங்களில் நாம் விரும்பிய கதவு திறக்காமல் இருக்கலாம், ஜெபத்திற்கான பதில் தாமதமாகலாம். ஆனால் தேவனுடைய மௌனம் அவர் நம்மை மறந்துவிட்டார் என்பதல்ல. யோசேப்பின் வாழ்க்கையில் குழி, அடிமைத்தனம், பொய்க்குற்றச்சாட்டு, சிறை ஆகியவை நன்மையாகத் தோன்றவில்லை. ஆனால் இறுதியில், **"நீங்கள் எனக்கு விரோதமாகப் பொல்லாங்கு நினைத்தீர்கள், தேவனோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்"** (ஆதி. 50:20) என்று அவன் சாட்சியளித்தான். மனிதன் தீமையாக நினைக்கும் சூழ்நிலையிலும் தேவன் நன்மையை உருவாக்க வல்லவர்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் தேவனுடைய நன்மையை வெளிப்படுத்துகிறது. அப்போஸ்தலர் 10:38 இயேசுவை "நன்மை செய்கிறவராயும்" குறிப்பிடுகிறது. அவர் பசியானவர்களுக்கு உணவு கொடுத்தார், நோயாளிகளை குணமாக்கினார், துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அளித்தார், பாவிகளுக்கு மன்னிப்பையும் நம்பிக்கையையும் வழங்கினார். எனவே தேவனுடைய நன்மை என்பது பணம், வசதி, பொருள் ஆசீர்வாதம் மட்டுமல்ல, கிருபை, மீட்பு, சமாதானம், பரிசுத்தம், வழிநடத்துதல் மற்றும் எதிர்கால நம்பிக்கை ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

தேவன் தரும் மிகப்பெரிய நன்மைகளில் ஒன்று கிருபை. நாம் தகுதியற்றவர்களாக இருந்தாலும் அவர் மன்னித்து, தாங்கி, மாற்றி, ஊழியத்திற்கு தகுதிப்படுத்துகிறார். அடுத்ததாக அவர் தரும் நன்மை சமாதானம். சூழ்நிலைகள் மாறாவிட்டாலும், கிறிஸ்துவின் சமாதானம் நம்முடைய உள்ளத்தை காக்கிறது. மேலும் சங்கீதம் 85:12 கூறுவதுபோல் பலனையும் அவர் தருகிறார். விதை விதைத்தவுடன் உடனடியாக அறுவடை கிடைப்பதில்லை. அதுபோல நமது ஜெபம், விசுவாசம், உழைப்பு, அன்பு ஆகியவற்றிற்கும் தேவன் ஏற்ற காலத்தில் பலனைத் தருகிறார்.

ஆகவே, தேவனுடைய நன்மையை எதிர்பார்க்கும் நாம் நன்றியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். உயிர், குடும்பம், உணவு,

வேலை, வீடு, சபை, இரட்சிப்பு என ஏற்கனவே பெற்றிருக்கும் நன்மைகளை நினைவுகூர வேண்டும். நாம் பெறாத ஒன்றை மட்டும் பார்த்துக் கொண்டிருக்காமல், தேவன் செய்த நன்மைகளை நினைத்து அவரைத் துதிக்க வேண்டும்.

அன்பிற்குரியவர்களே, இந்த மாதம் எப்படியிருக்கும், என்ன சவால்கள் வரும், எந்த கதவுகள் திறக்கும் என்பதை நாம் அறியாமல் இருக்கலாம். ஆனால் ஒரு காரியம் நமக்குத் தெரியும்: **"கர்த்தர் நன்மையானதைத் தருவார்."** எனவே சோர்ந்து போகாமல், நம்பிக்கையை இழக்காமல், நன்மையான ஆண்டவரின் கைகளில் நம்முடைய எதிர்காலத்தை ஒப்படைப்போம். நம்முடைய குடும்பத்திற்காகவும், பிள்ளைகளுக்காகவும், வேலைக்காகவும், ஊழியத்திற்காகவும், எதிர்காலத்திற்காகவும் விசுவாசத்துடன் சொல்லுவோம்:

"கர்த்தர் நன்மையானதைத் தருவார்,
அவர் நன்மை செய்வதில் ஒருபோதும் தவறமாட்டார்!"
ஆமென்.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்
சபை ஆயர்

செயலர் மடல்

"உனக்கு உண்டான எல்லா வரத்திலும், உன் கைகளுடைய எல்லாக் கிரியையிலும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்தபடியினால், கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஏழுநாளளவும் பண்டிகையை ஆசரித்து சந்தோஷமாயிருப்பாயாக."
(உபாகமம் 16:15)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபையின் விசுவாசிகள் யாவருக்கும் சபைக் குழுவின் சார்பில் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மையும் திருச்சபையின் ஊழியங்களையும் ஆசிர்வாதமாய் நடத்திய நம் தேவாதி தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை செலுத்துகிறேன்.

நாம் நமது திருச்சபையின் வழியாய் அக்டோபர் மாதம் 11-ம் நாள் ஞாயிற்று கிழமை மாலை 4:00 மணி துவங்கி Ajman- Al Jurf பகுதியில் உள்ள Habitat Private School-ல் வைத்து இந்த வருட அறுவடைப் பண்டிகையை கொண்டாட ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கான ஆயத்தங்களில் ஒவ்வொருவரும் அளித்து வருகின்ற உற்சாகமான பங்களிப்புகளுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். மகிழ்ச்சியான அந்த நாளிலும் நீங்கள் அனைவரும் உறவினர்கள் மற்றும் நண்பர்களோடு கலந்துகொண்டு நம் ஆண்டவர் நமக்குச் செய்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்தவும், மேலும் அன்றைய தின ஒவ்வொரு நிகழ்வுகளிலும், உங்கள் ஜெபத்தோடு கூடிய முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திருச்சபையில் புதிதாக ஆராதனைகளில் கலந்துகொண்டு நம் தேவனை மகிமைப்படுத்தி வருகின்ற யாவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். அதிகாலையிலே எழுந்து வாஞ்சையோடு வந்து தேனை தேடுகிறதான ஒவ்வொருவருடைய எதிர்பார்ப்புகளை தேவன் ஆசீர்வாதமாய் நல்கிட தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இந்த மாத திருச்சபையின் அனைத்து ஊழியங்களிலும் உற்சாகமாய் பங்கேற்போம், கர்த்தர் தாமே நம்மை ஆசிர்வதித்து வழிநடத்தி, தமது நாமத்திற்கு மகிமை உண்டாகச் செய்வாராக!

சபைக்குழு சார்பில்,

K. அருண்குமார் - செயலாளர்.

ஆண்கள் பகுதி

பொறுப்போடு வாழ்ந்த மனிதன்

ஆரோன் - மலை அல்லது ஒளிர்தல்

“அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடு பேசுவான், அவன் உனக்கு வாயாக இருப்பான்.” யாத்திராகமம் 4:16

திருமறையில் ஆரோன், மோசேயின் சகோதரராகவும், அவனுடைய துணையாகவும், பின்னர் பிரதான ஆசாரியராகவும் அறியப்படுகிறார். தேவன் மோசேயை அழைத்தபோது, அவனுடைய தயக்கத்தைக் கருத்தில் கொண்டு ஆரோனை அவனுக்குத் துணையாகக் கொடுத்தார். இதன் மூலம் தேவனுடைய பணியில் ஒருவருக்கொருவர் துணையாக நிற்பது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்.

ஆண்களின் வாழ்க்கையில் குடும்பம், சபை, சமூகம் எனப் பல பொறுப்புகள் உள்ளன. ஆரோனைப் போல நாம் நமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும். குறிப்பாக கணவனாகவும், தந்தையாகவும், சபை உறுப்பினராகவும், தலைவராகவும் நாம் பிறருக்கு நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

ஆனால் ஆரோனின் வாழ்க்கை நமக்கு ஓர் எச்சரிக்கையையும் தருகிறது. மக்கள் வற்புறுத்தியபோது பொற்கன்றுக்குட்டியை உருவாக்குவதற்கு ஆரோன் இடமளித்தான் (யாத்திராகமம் 32:1–6). இதன் மூலம் மனிதர்களைப் பிரியப்படுத்துவதைவிட தேவனுக்குக் கீழ்ப்படிதல் முக்கியம் என்பதை அறிகிறோம். உண்மையான ஆண்மையான தலைமை என்பது எல்லோருடைய விருப்பத்தையும் நிறைவேற்றுவது அல்ல, சரியானதைத் தைரியமாகச் செய்வதாகும்.

ஆரோன் பிரதான ஆசாரியராக நியமிக்கப்பட்டு, ஜனங்களுக்காக தேவனுடைய சந்நிதியில் நின்றான் (யாத்திராகமம் 28:1). அதுபோல இன்றைய ஆண்களும் தங்கள் குடும்பத்திற்காகவும், சபைக்காகவும் ஜெபிக்கும் மனிதர்களாக இருக்க வேண்டும். நமது வார்த்தைகள் ஆறுதலையும், நமது செயல்கள் நம்பிக்கையையும், நமது வாழ்க்கை தேவனுடைய சாட்சியையும் வெளிப்படுத்த வேண்டும்.

எண்ணாகமம் 6:24–26-ல் ஆரோன் ஜனங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் கட்டளையிட்டார். எனவே, ஒரு தேவனுடைய மனிதன் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும். குடும்பத்தில் அன்பை வளர்ப்பதும், சபையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதும், தேவையில் இருப்பவர்களுக்கு உதவுவதும் நமது பொறுப்பாகும்.

ஆரோனின் வாழ்க்கையிலிருந்து மூன்று முக்கிய பாடங்களை நாம் கற்றுக்கொள்ளலாம்: துணையாக நிற்போம், உண்மையில் நிலைப்போம், பிறருக்கு ஆசீர்வாதமாக வாழ்வோம். குறைகள் இருந்தாலும், தேவனிடம் நம்மை ஒப்புக்கொடுத்து உண்மையுடன் வாழும்போது, நமது வாழ்க்கையையும் குடும்பத்தையும் சபையையும் தேவன் தமது கரங்களில் பயன்படுத்துவார்.

Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்
சபை ஆயர்

பெண்கள் பகுதி

லேயாள் (Leah)

அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார். 1 கொரி. 1:28

ஆம்! மேலுள்ள வசனத்தின்படி ஒருவருடைய தோற்றத்தைப் பார்த்து, வாழ்க்கையின் நிலையைப் பார்த்து இவர்களுடைய வாழ்க்கை இப்படித்தான் இருக்கும் என்று தீர்மானித்து விட முடியாது. காரணம் தேவன் ஒவ்வொருவரையும் குறித்து உயர்ந்த திட்டங்கள், நோக்கங்கள் வைத்திருக்கிறார். இப்படியாக வேதத்தில் அற்பமானவள் என்று சொல்லப்பட்டிருந்த பெண் தான் லேயாள் (Leah). லேயாளைக் குறித்து நாம் பார்க்கப் போகிறோம்.

1. சோர்வின் மத்தியிலும் போராடினவள்

லேயாள் யார்? ஈசாக்கின் மனைவியாகிய ரெபெக்காளுடைய சகோதரர் லாபானுடைய மூத்த மகள். இவர் கி.மு.1720களில் வாழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. லேயாள் என்ற பெயரின் அர்த்தம் "சோர்வுள்ளவள்". இவருடைய பெயரின்படியே ஆதி 29:17 வசனம் சொல்கிறது இவளுடைய கண்கள் கூச்சப் பார்வையாயிருந்தது. எபிரேய வேதாகமம் தோராவின்

(Torah) படி இவருடைய கண்களைக் குறித்து ராக்கொத் (Rakkoth) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அர்த்தம் Weak, Tender அல்லது Weary என்று ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால பெலவீனமுள்ளதாக, தாழ்வுப் பார்வையுள்ளதாக, சோர்வான நிலையிலே உற்சாகம் இல்லாததாக அவளுடைய கண்கள் இருந்ததாம். நம் வேதாகமத்தில் ஆதியாகமம் 28-ஆம் அதிகாரத்தை படிப்போமானால் பெயெர்செபாவில் இருந்து பிரயாணம் செய்து ஆரான் என்ற ஊரில் இருந்த தாய் மாமன் லாபான் வீட்டிற்கு வந்த யாக்கோபு, லாபானின் இளைய மகள் ராகேலைப் பார்த்தவுடன் அவளைத் திருமணம் செய்துக் கொள்ள விரும்பினார். காரணம் அவள் மிகுந்த ரூபவதியும் அழகுள்ளவளுமாய் இருந்தாள். ஆனால் ராகேலுடைய தகப்பனாரோ, மூத்தவள் இருக்கும் போது இளையவளை திருமணம் செய்து வைக்க முடியாது என்று எண்ணி தந்திரமாக, லேயாளை யாக்கோபுக்கு மணமுடித்து வைத்தார். பின் யாக்கோபுக்கு கொடுத்த வாக்கின்படி ராகேலையும் திருமணம் செய்து வைத்தார். இந்த லேயாள் எப்போதும் ஏன் சோர்வுள்ளவளாக இருந்தால் என்றால் வேத வசனம் சொல்கிறது, லேயாளுடைய கண்கள் கூச்சப்பார்வையாயிருந்தது, ராகேலோ ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருந்தாள். யாக்கோபு ராகேல் பேரில் பிரியப்பட்டு: உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழு வருஷம் வேலை செய்கிறேன் என்றான். லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாய் நேசித்தான் (ஆதி 29: 17,18,30).

ஆம் மேலுள்ள வசனம் சொல்கிறது போல் ராகேல் தன்னைக் காட்டிலும் அழகுள்ளவளாக இருக்கிறதைக் கண்ட லேயாள் தான் ஒரு குறைவுள்ளவாக, அழகற்றவளாக பிறந்துவிட்டேன் என்று சிறுவயதிலிருந்தே அழுது கலங்கியிருக்கக்கூடும். இது ஒருபக்கம். திருமணம் செய்த கணவர் யாக்கோபும் தன்னுடைய தங்கை ராகேலை அதிகமாக நேசிக்கிறார் என்பதைப் பார்த்த லேயாள் தன் வாழ்க்கைக் கேள்விக்குறியாகிவிட்டதே என்று ஒவ்வொரு நாளும் கண்ணீர் வடித்திருக்கக்கூடும்.

எனக்கன்பான சகோதரியே! இந்த லேயாளைப் போல நீங்கள் உங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? அவர்களுக்கு அழகு இருக்கிறது, பணம் இருக்கிறது, படிப்பு இருக்கிறது, அவர்கள் சார்பாகப் பேச, உதவி செய்ய ஆட்கள் இருக்கிறார்கள் ஆனால் எனக்கோ ஒன்றுமே இல்லை, யாருமே இல்லை என்று உள்ளம் உடைந்து இருக்கின்றீர்களா? நீங்கள் ஒருவேளை அழகில்லாமல் இருக்கலாம்,

சரீரத்தில் ஒரு குறைவோடு இருக்கலாம், வசதியில்லாமல் இருக்கலாம். இதனால் மற்றவர்கள் உங்களை கேலி செய்யலாம். அற்பமாய் எண்ணலாம், ஆனால் உங்களைப் படைத்த தேவன் உங்களைக் குறித்து உயர்ந்த நோக்கங்கள், திட்டங்கள் வைத்திருக்கிறார் என்று மறந்துப் போக வேண்டாம்.

இந்த லேயாளுடைய தகப்பனார் தன் மகளுக்குத் திருமணம் செய்து வைப்பது தன் கடமை, அத்தோடு தன் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணினாரே தவிர, தன் மகளுடைய பின்வாழ்க்கை என்னாகும் என்று யோசிக்கவில்லை. லேயாளின் சகோதரி ராகேல் தன் அக்காவின் வேதனையைப் புரிந்துகொள்ளவில்லை. அவள் கணவராகிய யாக்கோபும் அவளுடைய ஏக்கங்களை அறிந்துகொள்ள மனதில்லாதவராக இருந்தார். இப்படியாக எல்லாராலும் மறக்கப்பட்ட நிலையிலே ஒருவர் அவளை நினைத்தார், கண்டார். அவர் யார் தெரியுமா? வேத வசனம் சொல்கிறது, லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். (ஆதி 29:31). ஆம் அன்பானவர்களே! இந்த உலகத்தில் எல்லாரும் நம்மை மறந்திருக்கலாம், உதவி செய்கிறேன் என்று சொன்னவர்கள் கைவிட்டிருக்கலாம், நீதி செய்ய வேண்டிய மக்களே நீதி செய்யாமல் அநீதி செய்துக் கொண்டிருக்கலாம். அதன் மத்தியிலும் நீதியை சரிகட்டுகிற தேவன் எல்லாருக்கும் முன்பாக நம்மைக் கனப்படுத்துவது நிச்சயம்.

2. ஏமாற்றத்தின் மத்தியிலும் பொறுமையுள்ளவள்

பொறுமை கடலினும் பெரிது என்று பெரியவர்கள் ஒரு பழமொழி சொல்வார்கள். ஆங்கிலத்தில் Patience. Be patient> if you are not patient you will become a patient என்று ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் உண்டு. அதற்கு அர்த்தம் நாம் எப்பொழுதும் பொறுமையாய் இருக்க வேண்டும். அப்படி இழந்தோமானால் நோயாளியாக மாறிவிடுவோம் என்பதே. பொறுமையை லேயாளின் கணவராகிய யாக்கோபு லேயாளைக் காட்டிலும் அவருடைய இன்னொரு மனைவியாகிய ராகேலை அதிகமாக நேசித்தார். (ஆதி 29:30)

இதை எண்ணி லேயாள் ஒவ்வொரு நாளும் அழுதிருக்கலாம், கண்ணீர் விட்டிருக்கலாம் ஆனால் அவள் தன் நம்பிக்கையை இழந்துவிடவில்லை, தன் கணவனோடு சண்டைப் போடவில்லை, அவர் தனக்கு செய்த அநீதியை எண்ணி இனி உன்னோடு வாழ முடியாது என்று சொல்லி

கணவரை விட்டுப் பிரிந்துப் போகவில்லை. இப்படியாக எல்லா நிலையிலும் பொறுமையாக இருந்த லேயாளைக் கர்த்தர் ஆசீர்வதிக்க நினைத்தது மாத்திரமல்ல, அவள் கணவராகிய யாக்கோபும் தன் மனைவியை நினைக்கும்படி செய்து, லேயாளைக் கர்ப்பந்தரிக்கச் செய்தார் என்று ஆதி.29: 31 வசனம் சொல்கிறது. அதன் பிறகு லேயாளுக்கு ஆறு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தது. இப்படியாக அற்பமாக எண்ணப்பட்ட லேயாளைக் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

3. துன்பத்தின் மத்தியிலும் மற்றவரை காயப்படுத்தவில்லை

யாக்கோபு தன் மனைவியாகிய லேயாளை நினைக்கும்படியாக செய்து லேயாளுக்கு ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், சிபிலோன் என்று ஆறு ஆண் பிள்ளைகளையும், தீனாள் என்ற ஒரு மகளையும் கொடுத்து தேவன் ஆசீர்வதித்தார். (ஆதி 29, 30)

லேயாள் பிள்ளை பெறுகிறதை ராகேல் கண்ட போது அவள் மேல் பொறாமைக் கொண்டாள் என்று ஆதி 30 : 1 சொல்கிறது. ஆங்கில வேதாகமத்தில் Rachel envied பகை சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அர்த்தம் பகைத்தாள். ராகேல் இப்படியாக தன் மனதில் கு ண ம் உள்ளவளாக இருந்த போதிலும் லேயாளுக்குள் இருந்த நல்குணத்தைப் பார்த்து நான் ஆச்சரியப் பட்டேன். காரணம் நீங்கள் 1 சாமுவேல் 1-ஆம் அதிகாரத்தை படிப்பீர்களானால் அங்கே எல்க்கானா என்ற மனிதனுக்கு பெனின்னாள், அன்னாள் என்ற இரண்டு மனைவிகள் இருந்தார்கள். அதிலே பெனின்னாள் பிள்ளை பாக்கியம் பெற்றவளாக இருந்தாள் அன்னாளுக்கு பிள்ளை பாக்கியம் இல்லை. இப்படியாக பிள்ளை செல்வத்தைப் பெற்றுக் கொண்ட பெனின்னாள், அன்னாளை எப்படி நடத்தினார் தெரியுமா? வேத வசனம் சொல்கிறது, அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்தினாள் (1சாமு 1:6). ஆம், சற்றும் யோசிக்காமல், ஒருவருடைய மனதை வேதனைப்படுத்துகிறோம் என்று எண்ணாமல் இந்த பெனின்னாள், அன்னாள் மனதைப் புண்படுத்தினதைப் போல இந்த லேயாள் தனக்கு பிள்ளைகள் இருந்த போதிலும், தேவையில்லாமல் அவள் சகோதரி ராகேல் பகைத்திருந்த போதிலும் பிள்ளைகளில்லாத ராகேலை லேயாள் தன் சொற்களினால், செயல்களினால் மனமடிவாக்கவில்லை, ஏளனமாகப் பேசவில்லை.

மேலும் லேயாளுக்குள் இருந்த ஒரு நல்ல குணம் என்னவென்றால் தேவசித்தத்தின்படி திரும்ப தன் இனத்தாரிடத்திற்கும், தன் தேசத்திற்கும் திரும்பிப் போக வேண்டுமென்று யாக்கோபு சொன்னபோது ஒரு மறுப்பும் சொல்லாமல், கணவருடைய மனதை புண்படுத்தாமல் இவ்வளவு தூரம் தான் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தேவன் உமக்குச் சொன்னபடி செய்யும் என்று தன் கணவரிடம் சொல்கிறார்.

எனக்கன்பான சகோதரிகளே! உங்கள் கணவர் தேவ சித்தத்தைக் குறித்து பேசும் போது, ஊழியங்களைக் குறித்து, கர்த்தருக்குக் காணிக்கைக் கொடுப்பதைக் குறித்து பேசும் போது நாம் அவர்களோடு இணைந்து அவர்களை உற்சாகப்படுத்துகின்றோமா? அல்லது அவர்களுடைய ஊழிய வாஞ்சைக்கு, வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்றோமா?

பொதுவாக ஆங்கிலத்தில் சொல்வார்கள் Every Action has an opposite reaction அதற்கு அர்த்தம் ஒவ்வொரு செயலுக்கும் எதிர்ப்புறமான செயல் உண்டு. ஆனால் லேயாளுடைய நல்குணம் தன்னை எதிர்த்து நிற்கிற நபர்களை, சூழ்நிலைகளை எதிர்த்து நிற்காமல் தான் சாதிக்க பிறந்தவள் என்றும் சங்கீதம் 138:8 வசனத்தின்படி கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்றும் தேவன் மேல் நம்பிக்கையாய் இருந்தார். தேவன் மேல் பற்றுள்ளவளாக, நம்பிக்கை உள்ளவளாக இருந்தார்.

ஆம் அன்பானவர்களே! அற்பமான நிலையிலே ஆரம்பித்த லேயாளுடைய வாழ்க்கையை மேன்மையாக மாற்றின தேவன் அதே மேன்மையை, அதே நன்மையை ஏன் உங்கள் வாழ்க்கையிலே செய்ய மாட்டார் என்று நினைக்கின்றீர்கள்? தன் அன்பிலே பட்சபாதம் இல்லாமல் யாவரையும் நேசிக்கின்ற கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் எதிர்ப்பார்க்காத திருப்பத்தையும், மேன்மையையும் கட்டளையிடுவது நிச்சயம்.

ஆண்டவர் தாமே நம்மை அனைவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

திருமதி. P.ஜாண்சி
ஆயரம்மா.

Harvest festival sermon

அறுவடைத் திருநாள் - நன்றியுடன் பகிர்ந்து வாழ்வோம்

திருமறை ஆதாரம்: சங்கீதம் 65:9–13

அறுவடைத் திருநாள் என்பது நமது பண்பாட்டில் மட்டுமல்ல, திருச்சபையின் வாழ்விலும் முக்கியமான நன்றியின் திருநாளாக விளங்குகிறது. மனிதன் நிலத்தைப் பண்படுத்தி, விதைத்து, நீரூற்றி, பாதுகாத்து உழைத்த பின்னர் விளைச்சலைப் பெறுகிறான். ஆனால் அந்த உழைப்பிற்கு மழையையும், சூரிய ஒளியையும், உயிரையும், வளர்ச்சியையும் தருகிறவர் இறைவன். எனவே அறுவடை என்பது மனித உழைப்பின் பலனை மட்டும் கொண்டாடுவது அல்ல, இறைவனுடைய கிருபையை நினைத்து நன்றி செலுத்தும் திருநாள் ஆகும்.

திருமறையில், இஸ்ரவேல் மக்கள் தங்கள் வயலின் முதற்பலனை இறைவனுக்குக் காணிக்கையாகச் செலுத்தி நன்றி கூறினர். **“உன் நிலத்தின் முதற்பலன்களில் முதற்பலனை உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருவாயாக”** (யாத்திராகமம் 23:19) என்ற கட்டளை, கிடைத்த ஆசீர்வாதத்தின் முதல் இடம் இறைவனுக்குரியது என்பதை உணர்த்துகிறது.

இந்த வேதாகமப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக, பல திருச்சபைகளில் அறுவடைத் திருநாள் Harvest Festival / Harvest Thanksgiving ஆகக் கொண்டாடப்படுகிறது. விசுவாசிகள் தங்கள் வீடுகளிலிருந்தும், தோட்டங்களிலிருந்தும், தங்கள் வருமானத்திலிருந்தும் கிடைத்த நன்மைகளின் அடையாளமாக பழங்கள், காய்கறிகள், தானியங்கள் மற்றும் பல்வேறு பொருட்களை ஆலயத்திற்குக் கொண்டு வந்து, அவற்றை அலங்கரித்து, இறைவனுக்கு நன்றி செலுத்தும் பாரம்பரியம் காணப்படுகிறது. பின்னர் இவை தேவையுள்ளவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலம் நன்றி செலுத்துதல் கொடையாகவும், கொடை சேவையாகவும் மாறுகிறது.

சங்கீதம் 65-ல், **“தேவரீர் தேசத்தை விசாரித்து, அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர், அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்”** (வச. 9) என்று சங்கீதக்காரன் பாடுகிறார்.

மழை, நிலம், விதை, விளைச்சல் ஆகிய அனைத்திலும் இறைவனுடைய கரம் இருப்பதை அவர் உணர்கிறார். நமது வாழ்க்கையிலும் இதே உண்மை பொருந்துகிறது. நமது வேலை, வருமானம், குடும்பம், உடல் நலம், திறமைகள், வாய்ப்புகள் அனைத்தும் இறைவன் அருளிய ஆசீர்வாதங்களே.

அறுவடை நமக்கு நன்றியையும், உழைப்பையும், பகிர்வையும் கற்றுத்தருகிறது. பவுல், **"மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்"** (கலாத்தியர் 6:7) என்கிறார். ஆகவே நமது வாழ்க்கையில் அன்பையும், இரக்கத்தையும், உண்மையையும், நன்மையையும் விதைப்போம். மேலும், இறைவன் நமக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை தேவையுள்ளவர்களுடன் பகிர்வோம்.

இன்றைய அறுவடைத் திருநாளில் நாம் ஆலயத்திற்கு பொருட்களை மட்டும் கொண்டுவராமல், நன்றியுள்ள இருதயத்தையும் கொண்டுவருவோம். இறைவன் கொடுத்ததை நினைத்து நன்றி செலுத்துவோம், பெற்ற ஆசீர்வாதங்களைப் பகிர்வோம், பிறருடைய வாழ்வில் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் விதைப்போம்.

"கர்த்தர் நன்மையானதைத் தருவார், நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்." - சங்கீதம் 85:12

Rev. J.D.R.Jebastin



உலக உணவு நாள் - அக்டோபர் 16

பகிர்ந்து வாழ்வோம்

“எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்.” - மத். 6:11

உணவு என்பது மனிதனின் அடிப்படைத் தேவை. நாம் தினமும் உண்ணும் உணவு இறைவன் நமக்குத் தந்த அருளின் கொடை என்பதை உணர்ந்து, அதற்காக நன்றி செலுத்துவது நமது கடமையாகும். நிலம், மழை, சூரியஒளி, விதை, விளைச்சல், உழைப்பு என உணவு நமது மேசையை வந்தடைவதற்குப் பின்னால் பல இறையருள்கள் உள்ளன.

இயேசு ஐயாயிரம் பேருக்கு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு உணவளித்தபோது, **“நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்”** என்று சீடர்களிடம் கூறினார் (மத்தேயு 14:16). பிறருடைய பசியைக் கண்டு இரக்கம் கொள்வதும், நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொள்வதும் கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய அடையாளமாகும்.

இன்று சிலர் உணவை மிகுதியாக வீணாக்குகிறார்கள், அதே நேரத்தில் பலர் ஒரு வேளை உணவுக்காகவே போராடுகின்றனர். எனவே, உணவை வீணாக்காமல் பயன்படுத்துவதும், தேவையுள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்வதும் நமது கிறிஸ்தவப் பொறுப்பாகும். **“பசியாயிருந்தேன், எனக்கு உணவு கொடுத்தீர்கள்”** என்று இயேசு கூறுகிறார் (மத்தேயு 25:35). பசியுள்ளவர்களுக்கு நாம் செய்யும் உதவி கிறிஸ்துவுக்கே செய்கிற உதவியாகும்.

உலக உணவு நாள் நமக்கு ஒரு முக்கியமான செய்தியை நினைவூட்டுகிறது: இறைவன் கொடுத்ததை நன்றியுடன் பெற்றுக் கொள்வோம். பொறுப்புடன் பயன்படுத்துவோம். அன்புடன் பகிர்ந்து கொள்வோம். நமது வீட்டில் உணவு நிறைந்திருப்பதற்காக மட்டும் மகிழாமல், நம்மைச் சுற்றியுள்ளவர்களின் பசியையும் நினைவில் கொள்வோம்.

உணவை மதிப்போம், வீணாக்குவதைத் தவிர்ப்போம், பசியுள்ளவர்களுக்கு உதவுவோம். அப்பொழுது நமது உணவுமேசை மட்டுமல்ல, நமது வாழ்க்கையும் இறைவனுடைய அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தும் சாட்சியாக மாறும்.

திருக்குறள் வழி மறையறிவோம்

திருக்குறள் 9
கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

இறைவனுடைய பாதத்தில் பணியும் தலை

திருவள்ளுவர் மனித வாழ்வின் உயர்வை இறைவனை வணங்குவதோடு இணைத்துப் பார்க்கிறார். "எண்குணத்தான்" என்று இறைவனைச் சுட்டிக்காட்டி, அவருடைய திருவடிகளை வணங்காத தலை, பயனற்ற புலன்களைப் போல குணமற்றதாகும் என்கிறார். கண் இருந்தும் பார்க்க முடியாதது, காது இருந்தும் கேட்க முடியாதது எவ்வாறு பயனற்றதோ, அதுபோல அறிவும் ஆற்றலும் இருந்தும் இறைவனைத் தேடி வணங்காத வாழ்க்கை தனது உண்மையான நோக்கத்தை இழக்கிறது.

வேதாகமமும் இதே உண்மையை வலியுறுத்துகிறது. **"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்"** (நீதிமொழிகள் 9:10) என்று கூறுகிறது. இறைவனை வணங்குவது வெறும் வெளிப்புறச் சடங்கு அல்ல, அது நமது வாழ்க்கையின் மையத்தில் தேவனை வைத்திருப்பதாகும். நமது சிந்தனை, செயல்கள், முடிவுகள் அனைத்தும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவதே உண்மையான ஆராதனை.

இறைவனுடைய பாதத்தில் பணிவது என்பது பணிவு, கீழ்ப்படிதல், நம்பிக்கை ஆகிய மூன்றையும் வெளிப்படுத்துகிறது. தன் அறிவை மட்டுமே நம்புகிறவன் தன் வழியைத் தேர்ந்தெடுக்கிறான், ஆனால் தேவனை நம்புகிறவன், **"உன் வழிகளிலெல்லாம் அவரை அறிந்துகொள், அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்"** (நீதிமொழிகள் 3:6) என்ற வசனத்தின்படி தேவனுடைய வழிநடத்துதலை நாடுகிறான்.

இறைவனுடைய பாதத்தில் வணங்கியவர்களின் வாழ்க்கை வேதாகமத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. ஆபிரகாம் தேவனுடைய அழைப்பைக் கேட்டபோது, முழுமையான புரிதல் இல்லாவிட்டாலும் விசுவாசத்தோடு புறப்பட்டார். மோசே தன் பலவீனத்தை உணர்ந்தபோது தேவனுடைய உதவியை நாடினார். மரியாள், **"இதோ, நான் ஆண்டவருடைய அடிமை"** என்று தன்னை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தாள் (லூக். 1:38). இவர்களின் வாழ்க்கையில் காணப்படும் பொதுவான பண்பு தங்களைவிட தேவனை உயர்த்திய பணிவு.

இறையியலாளர் ஆகஸ்டின் வலியுறுத்தியதுபோல், மனித இருதயம் தேவனில் இளைப்பாறும்போதுதான் அதன் உண்மையான நிறைவை அடைகிறது. இதன் பொருள், மனிதனுடைய அறிவும் திறமையும் தேவையற்றவை என்பதல்ல, அவை தேவனை மையமாகக் கொண்டிருக்கும்போது சரியான நோக்கத்தையும் அர்த்தத்தையும் பெறுகின்றன என்பதாகும்.

இன்றைய உலகில் அறிவு வளர்ந்திருக்கிறது, தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது, மனிதனுடைய சாதனைகள் பெருகியிருக்கின்றன. ஆனால் இந்த வளர்ச்சிகளின் நடுவிலும் மனிதன் தேவனை மறந்துவிட்டால், அவனுடைய வாழ்க்கையின் ஆன்மீக நோக்கம் குறைந்து விடும். ஆகவே, தலை உயர்த்தி வாழ்வதற்கு முன், இறைவனுடைய பாதத்தில் தலை வணங்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

குறள் 9 நமக்கு ஒரு முக்கியமான ஆன்மீக அழைப்பை வழங்குகிறது நமது தலை அறிவால் மட்டுமல்ல, பணிவால் சிறக்க வேண்டும். நமது வாழ்க்கை சாதனைகளால் மட்டுமல்ல, தேவனுடனான உறவால் அர்த்தமடைய வேண்டும்.

எனவே, ஒவ்வொரு நாளும் நம்மை நாமே கேட்போம்: “என் வாழ்க்கையின் மையத்தில் யார் இருக்கிறார்? என் முடிவுகளில் தேவனுடைய சித்தத்தை நாடுகிறேனா? என் திறமைகளை அவருடைய மகிமைக்காகப் பயன்படுத்துகிறேனா?” சிந்திப்போம்.

இறைவனுடைய பாதத்தில் வணங்கும் தலைதான் உண்மையான ஞானத்தைப் பெறுகிறது, அவருடைய சித்தத்திற்கு பணியும் வாழ்க்கைதான் உண்மையான ஆசீர்வாதத்தை அனுபவிக்கிறது.

“தேவனுடைய பாதத்தில் பணிவோம்” அவருடைய வழியில் நடப்போம், நமது வாழ்க்கையால் அவரை மகிமைப்படுத்துவோம்.

Compiled by **Mrs. Reji Alwin**

கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவ பண்புகள்

"நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்." (மத்தேயு 5:13)

மத்தேயு 5–7 அதிகாரங்களில் இயேசு கிறிஸ்து தமது சீடர்களுக்குக் கொடுத்த போதனைகள் மலைப்பிரசங்கம் என்று அழைக்கப்படுகின்றன. **"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"** என்ற வார்த்தையின் மூலம், கிறிஸ்தவர்கள் உலகத்தை விட்டு விலகி வாழ வேண்டியவர்கள் அல்ல, உலகத்தின் நடுவில் இருந்து, தங்கள் வாழ்க்கையின் மூலம் கிறிஸ்துவின் நற்சாட்சியை வெளிப்படுத்த வேண்டியவர்கள் என்பதை இயேசு உணர்த்துகிறார். உப்பு சிறியதாகத் தோன்றினாலும் அதன் தாக்கம் பெரியது. அதுபோல ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையும் சிறியதாகத் தோன்றினாலும், அது குடும்பத்திலும், சபையிலும், சமுதாயத்திலும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

முதலாவதாக, உப்பு சுவையை அளிக்கிறது.

உப்பு இல்லாத உணவு சுவையற்றதாக இருப்பதைப் போல, கிறிஸ்துவின் அன்பும் கிருபையும் இல்லாத வாழ்க்கை உலகத்திற்கு தேவையான ஆன்மீக சுவையை வழங்க முடியாது. கிறிஸ்தவர் பேசுகின்ற வார்த்தைகள், நடந்து கொள்கின்ற விதம், பிறரை அணுகுகின்ற முறை ஆகியவற்றில் கிறிஸ்துவின் அன்பு வெளிப்பட வேண்டும். "உப்பாய் இருப்பது" என்பது வெறுமனே கிறிஸ்தவப் பெயரைத் தாங்குவது அல்ல, நம்முடைய வாழ்க்கையின் மூலம் கிறிஸ்துவின் சுவையை பிறருக்கு உணரச் செய்வதாகும்.

இரண்டாவதாக, உப்பு பாதுகாக்கிறது.

பழைய காலங்களில் உணவு கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்கு உப்பு பயன்படுத்தப்பட்டது. அதுபோல கிறிஸ்தவர்கள் தங்கள் நேர்மையான வாழ்க்கையினால் சமுதாயத்தில் நன்மையையும் நீதியையும் பாதுகாக்க அழைக்கப்பட்டுள்ளனர். ஊழல், பொய், அநீதி, வெறுப்பு போன்றவை அதிகரிக்கும் இடத்தில் ஒரு கிறிஸ்தவர் உண்மைக்காக நிற்க வேண்டும். நாம் இருக்கும் இடத்தில் நன்மை குறையாமல் இருப்பதற்கும், தீமை பெருகாமல் இருப்பதற்கும் நமது வாழ்க்கை ஒரு தடுப்பாக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, உப்பு தன்னையே கரைத்து மற்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

உப்பு உணவில் கலந்துவிட்டால் தனியாகத் தெரியாது, ஆனால் அதன் விளைவு தெரியும். கிறிஸ்தவ வாழ்க்கையும் அவ்வாறே இருக்க வேண்டும். நாம் உலகத்தோடு கலந்துவிட வேண்டும் என்பது உலகத்தின் தீய வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதல்ல. மாறாக, உலகத்தின் நடுவில் வாழ்ந்தாலும், கிறிஸ்துவின் குணநலன்களை வெளிப்படுத்த வேண்டும். நமது அலுவலகத்தில், குடும்பத்தில், கல்வி நிலையத்தில், அயலாரிடத்தில் நாம் இருக்கும்போது, நம்முடைய இருப்பு ஒரு நன்மையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இயேசு தொடர்ந்து, "உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?" என்று கேட்கிறார். இது ஒரு தீவிரமான எச்சரிக்கை. கிறிஸ்தவரின் வாழ்க்கையில் கிறிஸ்துவின் குணம் காணப்படாமல் போனால், அவருடைய சாட்சி பலவீனமடைகிறது. வார்த்தைகளால் மட்டும் கிறிஸ்துவைப் பற்றி பேசுவது போதாது, வாழ்க்கையால் அவரை வெளிப்படுத்த வேண்டும். நம்முடைய விசுவாசம் நமது நடத்தையிலும், உறவுகளிலும், சேவையிலும், அன்பிலும் வெளிப்பட வேண்டும்.

மலைப்பிரசங்கத்தின் தொடக்கத்தில் இயேசு "ஆவியில் எளிமையுள்ளவர்கள்... இரக்கமுள்ளவர்கள்... சமாதானம் பண்ணுகிறவர்கள்... நீதிக்காகப் பசிதாகமுள்ளவர்கள்" என்று கூறுகிறார் (மத்தேயு 5:3-12). உடனடியாக "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறுவது முக்கியமானது. அதாவது, கிறிஸ்துவின் சீடனின் உள்ளார்ந்த குணநலன்கள் வெளிப்புற உலகில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நாம் கிறிஸ்துவின் சீடர்களாக இருப்பது நம்முடைய தனிப்பட்ட ஆசீர்வாதத்திற்காக மட்டும் அல்ல, பிறருக்கும் ஆசீர்வாதமாக இருப்பதற்காக.

எனவே, இன்று நாம் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி: "நான் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சுவை இருக்கிறதா?" என் குடும்பத்தில் என்னால் அன்பு பெருகுகிறதா? என் பணியிடத்தில் என்னால் நேர்மை வெளிப்படுகிறதா? என் சபையில் என்னால் ஒற்றுமை உருவாகிறதா? என்னைச் சந்திக்கும் ஒருவரின் வாழ்க்கையில் என்னால் கிறிஸ்துவின் அன்பை உணர முடிகிறதா?

